# CONTENTS

பொருளடக்கம்


| | | | Page No |
|---|---|---|---|
| 1. | **Central Police Organisation**<br>மத்திய பாதுகாப்பு அமைப்பு | | |
| **a.** | Intelligence Bureau (IB)<br>மத்திய இரகசியப் பிரிவு | ... | 1 |
| **b.** | Central Bureau of Investigation (CBI)<br>மத்திய புலனாய்வுத் துறை | ... | 1 |
| **c.** | Research and Analysis Wing (RAW)<br>ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைப் பிரிவு | ... | 2 |
| **d.** | Central Reserve Police Force (CRPF)<br>மத்திய சேமக் காவல் படை | ... | 2 |
| **e.** | Border Security Force (BSF)<br>எல்லைப் பாதுகாப்புப் படை | ... | 2 |
| **f.** | Indo-Tibethian Border Polcie (ITBP)<br>இந்தோ-தீபெத்தியன் எல்லைப்பாதுகாப்புப் படை | ... | 3 |
| **g.** | Bureau of Police Research and Development (BPRD)<br>காவல் துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு | ... | 3 |
| **h.** | Railway Protection Force(RPF)<br>இருப்புப் பாதை காப்புப் படை | ... | 3 |
| **i.** | Government Railway Police (GRP)<br>அரசாங்க ரயில்வே போலீஸ் | ... | 3 |
| **j.** | National Police Academy (NPA)<br>தேசிய காவல் பயிற்சி ஆவணம் | ... | 3 |
| **k.** | Central Industrial Security Force(CISF)<br>மத்திய தொழிற் காப்புப் படை | ... | 4 |
| **l.** | Institute of Criminology and Forensic Science (ICFS)<br>குற்றவியல் குற்றம் சார்ந்த அறிவியல் கூடம் | ... | 4 |
| **m** | Central Forensic Science Laboratary (CFSL)<br>மத்திய தடவியல் அறிவியல் கூடம் | ... | 4 |

Page No

II. **Organisation of the State Government (Pondicherry)** ...

(a) **Marital Traditions : Life Forece of an Armed** ...
போர் மரபுகள் ஆயுதப் படையின் உயிர் துடிப்பு

**(b)** Puducherry Armed Police ...
புதுச்சேரி ஆயிதப்படைப் பிரிவு

**(c)** Traffic Police ...
போக்குவரத்து காவல் துறை

**(d)** Criminal Investigation Department ...
குற்றப் புலனாய்வுத் துறை

**(e)** Special Branch ...
சிறப்புப் பிரிவு

**(f)** Food Cell ...
உணவு கட்டுப்பாட்டுத் துறை

**(g)** Vigilance and Anti-Corruption Police Unit ...
இலஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை

**(h)** Protection of Civil Rights Cell ...
குடியுரிமை பாதுகாப்புப் பிரிவு

**(i)** Radio Branch ...
வானொலிப் பிரிவு

**(j)** Motor Transports Section ...
மோட்டார் வாகனப் பிரிவு

**III** Relations between the Police and the Panchayats, the Social Service, the Magistracy and other Departments ...
பஞ்சாயத்துக்கள், சிறப்பு அலுவல்கள், நீதிபதிகள் மற்றும் இதர துறைகளுடன் காவல் துறை கொண்டிருக்கவேண்டிய உறவு.

# I. Central Police Organisation

*மத்திய பாதுகாப்பு அமைப்புகள்*

**மத்திய காவல் துறை வரலாறு.**

முன்காலத்தில் ஜமீன்தார்கள் அவர்கள் எல்லைக்குட்பட்ட பெரிய நகரங்களில் 'கொத்தவால்' என்ற நியமனம் செய்து பொது மக்களின் அமைதி வாழ்க்கைக்கு பங்கம் ஏற்படுத்தும் தீயவர்களைக் கண்டு பிடித்து தண்டனை கொடுத்து வந்தார்கள், பிறகு முகலாயர்கள் ஆட்சியில் ராஜ்யத்தை பல மாவட்டங்களாகப் பிரித்து இந்த கொத்தவால் நியமனத்தை சற்று விரிவு படுத்தினார்கள், நாளடைவில் கொத்தவால் என்பவர்கள் நீதிக்குப் புறம்பாக நடந்து மக்களை நசுக்க தலைப்பட்டனர். இதன் பேரில் அதுசமயம் ஆளுகையில் இருந்த ஆங்கிலேயர்கள் கொத்தவால் நியமனத்திற்குப் பதிலாக போலீஸ் இலாகாவை அமைத்துக் குற்றங்களைக் கண்டுபிடித்து மக்களிடத்தில் அமைதி ஏற்படுத்தினர். சென்னை மாகாணத்தில் போலீஸ் இலாகா 1858–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இந்தியாவில் மத்திய அரசு (Central or Union Government ) என்றும் மாநில அரசு என்றும் சொல்லப்படுகின்றன. இந்திய அரசியல் சாசனச் சட்டத்தினபடி, காவல் துறை என்பது மாநில அரசின் பொறுப்பு ஆகும். (Police is a state subject). இருப்பினும் உள்நாட்டுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின்கீழ் சில காவல் துறை அமைப்புகள் செயல்படுகின்றன.

## a) மத்திய இரகசியப் பிரிவு - INTELLIGENCE BUREAU (IB):

மத்திய அரசின் இரகசியப் பிரிவு அரசின் கண்களாகவும் காதுகளாகவும் விளங்குகிறது, இது ஒரு இயக்குநரின் தலைமையில் உள்ளது. இந்த அமைப்பு பல்வேறு மாநிலங்களில் உள்ள சட்டம், ஒழுங்கு பற்றியும், இனக்கலவரங்களைப் பற்றியும் முன்கூட்டியே இரகசியத் தகவல்களை சேகரிக்கிறது. இதைப் போல் ஒவ்வொரு மாநிலங்களில் உள்ள அரசியல் நிலைக்குறித்தும் மிக முக்கிய நபர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புப் பற்றியும் கண்காணிக்கிறது. இந்த அமைப்பின் பிரிவுகள் ஒவ்வொரு மாநில தலைநகரங்களிலும் ஒரு துணை இயக்குநரின்கீழ் செயல்படுகிறது. துணை இயக்குநருக்கு மத்திய இரகசியப் பிரிவு அதிகாரிகளும், உதவி இரகசிய அதிகாரிகளும் (Central Intelligence Officer) உதவி செய்கிறார்கள். இந்த மத்திய அமைப்பின் தலைமையகம் புதுடெல்லியில் உள்ளது.

## b). மத்திய புலனாய்வு துறை – (CENTRAL BUREAU OF INVESTIGATION (CBI).

இந்த அமைப்பு இந்திய அரசாங்கத்தில் தலைசிறந்த புலனாய்வுத் துறையாகும். மத்திய அரசு ஊழியர்கள், மத்திய அரசுத் துறை நிறுவன ஊழியர் மற்றும் யூனியன்

ஆட்சிப் பிரதேசங்களின் அரசு மற்றும் அரசுத் துறை ஊழியர்கள் கையூட்டுப் பெறுவதைத் தடுக்கசவும், ஏற்றுமதி, இறக்குமதி, அன்னியச் செலவணி வழக்குகளை விசாரிக்கவும், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நடந்த மிக சிக்கலான குற்றங்களை துப்பு துலக்குவதற்கும் பயன்படுகிறது. இதன் தலைமையகம் புது டெல்லியில் உள்ளது. இதன் தலைவர் "இயக்குநர்" எனப்படுவார். இந்த அமைப்பின் புலனாய்வுப் பிரிவுகள் தலைமையகத்திலும், மாநிலங்களிலும் பெரும் நகரங்களிலும் செயல்படுகின்றன. இவைத் தவிர பல பிராந்திய கிளைகள் மாநிலத் தலைநகரங்களிலும் மற்றும் முக்கிய நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மிகவும் முக்கியமான சிக்கலான வழக்குகளை விசாரணை செய்ய தலைமையகத்திலேயே 18 புலனாய்வுக் குழுக்கள் உள்ளன.

## (c )ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைப் பிரிவு -RESEARCH AND ANALYSIS WING (RAW).

வெளிநாட்டவர் இந்தியவில் ஒற்று வேலை செய்யாமல் கண்காணிக்க இது உதவுகிறது. அதைப் போன்று நம் நாட்டு பாதுகாப்பு, அரசாங்க இரகசியங்களை வெளிநாட்டவர் சிக்காமல் இருக்க இந்த அமைப்பு இயங்குகிறது.

## (d) மத்திய சேமக் காவல் படை – CENTRAL RESERVE POLICE FORCE (CRPF):

இப்படையானது 1939-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்து அமைப்பு இந்தியாவின் ஆயுதப்படைகளுக்கு துணையாக உள்நாட்டுப் பாதுகாப்புக்காக பாடுபடுகிறது. இந்த அமைப்பை மத்திய அரசின் ஆணைப்படிதான் பயன்படுத்த முடியும். இப்படையின் பிரிவுகள் ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரிலும் செயல்படுகிறது. சட்டம், ஒழுங்கு கெடும் கடினமான சூழ்நிலை ஏற்படும்பொழுது மத்திய அரசின் அனுமதியுடன், மாநில அரசு இப்படைகளைப் பயன்படுத்தலாம். வெள்ளப் பெருக்க, புயல் போன்ற இயற்கையின் கொடுமைகள் தாக்கும்போது இப்படையின் சேவை பயன்படுத்தப்படுகிறது. இப்படையில் பணியாற்றுபவர்கள் மத்திய சேமக் காவல் படை சட்டம் 1945-ல் கண்டபடி நிர்வாகம் செய்யக் கடமைப்பட்டுள்ளனர். இப்படை ஒரு இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்குகிறது.

## (e). எல்லை பாதுகாப்புப் படை – BORDER SECURITY FORCE (BSF)

இப்படை 1965 டிசம்பர் மாதத்தில் இருந்து அமைக்கப்பட்டு நம் நாட்டில் பணியாற்றி வருகிறது. இந்த அமைப்பு ஒரு தலைமை இயக்குநரின்கீழ் இயங்குகிறது., இது ராணுவப்படையின் தன்மை கொண்டது. தானியங்கி ஆயுதங்கள் இப்படையின் உபயோகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளன. இதில் குதிரைப்படையும் ஒட்டகப் பிரிவும் உள்ளன. இப்படையினர் யுத்த தந்திர செய்தி தகவல்களை சேகரிப்பதிலும், நம் நாட்டின் எல்லைப் பகுதிகளுக்கு உள்ளவர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிப்பதிலும், கள்ளக் கடத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், நாட்டிற்கு அழிவு ஏற்படுத்தும் ஊடுருவலைக் கண்காணித்தலும், தடுப்பதிலும் உபயோகப்படுத்தப்படுகின்றனர். சுருக்கமாகச் சொல்லின் நம் நாட்டுப் பாதுகாவலர் படைக்கு (Defence Service) ஒரு உறுதுணை படையாக செயலாற்றி வருகிறது என்றும் சொல்லலாம். இப்படைக்கு அளிக்கப்பட்ட அலுவல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. பொது அலுவல்கள் பிரிவு (General Duty Service)
2. மருத்துவ அலுவல்கள் பிரிவு (Medical Service)
3. தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்ப விஞ்ஞான அலுவல்கள் (Tenchnical Serrvice Including communication)

f). இந்தோ-தீபெத்தின் எல்லைப் பாதுகாப்புப்படை – INDO TIBETHIAN BORDER POLICE (ITBP);

இப்படை இந்திய – தீபெத் எல்லையில் கள்ளக் கடத்தல் ஊடுருவல், உளவாளிகள் நடமாட்டம் இவற்றைத் தடுக்கிறது.

g). காவல் துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு - BUREAU OF POLICE RESEARCH AND DEVELOPMENT (BPRD);

இந் நிறவனம் 1970-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. காவல் துறையின் அமைப்பு, தேவைகள், வளர்ச்சிகள், மேம்பாடு இவைப்பற்றி ஆராய்ந்து வழிமுறைக் காண இந்நிறுவனம் பயன்படுகிறது. முக்கியமாக குற்றங்களை கட்டுபடுத்தல் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுதல் ஆகியவற்றில் அறிவியல் பூர்வமாக புத்திகளை வழங்குகிறது. இது ஒரு 'Director General' தலைமையில் இயங்குகிறது. மத்திய துப்பறியும் பயிற்சி பள்ளிகள (Central Detective Training School)) இந்த அமைப்பின்கீழ் இயங்குகின்றது.

**h). இருப்புப்பாதை காப்புப்படை- RAILWAY PROTECTION FROCE (RPF).**

1957-ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் இப்படையை நிர்வகிக்க இருப்புப் பாதை பாதுகாப்புப்படைச் சட்டம் 1957-ல் நிறுவேற்றப்பட்டது. அதன்படி இப்படை தோற்றுவிக்கப்பட்டது. இப்படையினர் ரயில்வே நிலையங்களையும், இருப்புப்பாதை, ரயில்வே, ரயில்கள். ரயில் நிலைய சொத்துக்கள் இவைகளைப் பாதுகாவல் செய்தல், ரயில்களிலும் மற்றும் இருப்புபப்பாதைகளிலும் எந்தவித குற்றங்கள் நடவாமல் தடுத்தல் போன்ற பணிகளில் அமர்த்தப்படுகின்றனர். இவர்கள் ரயில்வே நிர்வாகத்துக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள். ஆனால் இப்படையினர் மாநில இருப்புப்பாதை காவல் பிரிவுக்கு மாற்றுவது அல்ல.

**(i) அரசாங்க ரயில்வே போலீஸ் (GOVERNMENT RAILWAY POLICE (GRP)**

இப்படையினர் ரயில்வே துறையின் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும், குற்றங்கள் நடவாமல் தடுக்கவும் குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், குறறம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்யவும் பயன்படுத்தப்படுகிறார்கள்.

**(j) தேசிய காவல் பயிற்சி ஆவணம் - NATIONAL POLICE ACADEMY (NPA)**

சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய காவல் பயிற்சி ஆவணம் முதலில் ஆபுமலையில் இயங்கி வந்தது. 1974-ஆம் ஆண்டு இது ஹைதராபாத்துக்கு மாற்றப்பட்டது. மத்திய பொது வேலை வாய்ப்பு நிறுவனத்தால் (UPSC) தேர்ந்து

எடுக்கப்பட்ட இந்திய காவல் பணி அதிகாரிகள் (IPS Officer's and D.S.P) நேர்முகத் தேர்வு பெற்று பயிற்சி பெறுகின்றார்கள். இது ஒரு "Director General" தலைமையில் இயங்குகிறது.

**(k) மத்திய தொழிற் காப்புப்படை – CENTRAL INDUSTRIAL SECRUITY FORCE (CISF)**

மத்திய அரசின் தொழிற்துறை நிறுவனங்களின் பாதுகாப்புக்காக இப்படை நிறுவப்பட்டது. இந்நிறுவனம் மத்திய தொழிற்காப்புச் சட்டம் 1968-ல் அமுலாக்கப்பட்டு அதன்படி செயலாற்றுகிறது. மத்திய அரசின் தொழிற்துறை நிறுவனங்களான சென்னை துறைமுகம் ஆவணம் (Madras Port Trust)) அணுசக்தி தொழிற்சாலை (Automic Power Station). தும்பா ராக்கெட் தளம். BHEL/ (Bharath Heavy Electronic Limited), M.R.L. (Madras Rubray Limited) போன்ற பொதுத்துறை நிறுவனங்களை காக்க பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு வெறும் காப்புப்படையே ஆகும். புலனாய்வுப் போன்ற அதிகாரங்கள் கிடையாது. ஆனால் மத்திய தொழிற்காப்பு சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் நபர்களை கைதுசெய்தாலும் அருகாமையில் உள்ள காவல் நிலையத்தில் குற்றவாளியையும், சொத்துக்களையும், நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த வேண்டும். வேறு அதிகாரங்கள் கிடையாது. இப்படையானது ஒரு "இயக்குநர்" தலைமையில் இயங்குகிறது. இப்படைக்கு தேவையான காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் உதவி ஆய்வாளர்கள், நேர்முக தேர்வுகள் மூலம் தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். இயக்குநரின்கீழ் துணைத் தலைவர்கள், உதவி தளவாய்கள் உயர்நிலையில் பணியாற்றுகின்றனர்.

**(l) குற்றவியல் குற்றம் சார்ந்த அறிவியல் கூடம் - INSTITUTE OF CRIMINOLOGY AND FORENSIC SCIENCE (ICFS).**

இந்நிறுவனம் புதுடில்லியில் உள்ளது. இது காவல் துணைத்தலைவர் பதவியில் உள்ள ஒரு இயக்குநரின் தலைமையில் செயல்படுகிறது. இது குற்றம் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்து, குற்றம் சார்ந்த அறிவியல் பற்றியும், குற்றவியல் பற்றியும் நிபுணர்களுக்கும், காவல் துறையினருக்கும் பயிற்சி அளிக்கிறது.

**(m) மத்திய தடவியல் அறிவியல் கூடம் - CENTRAL FORNESIC SCIENCE LABORATORY (CSFL)**

புதுடில்லியில் தலைமையகம் கொண்ட இந்நிறுவனம் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு கிளையுடன் இயங்குகிறது. இந்நிறுவனத்தின் தலைவர், இயக்குநர் அந்தஸ்து உள்ளவர்

காவல் துறையின் வழக்கு விசாரணையில் தடவியல் ஆய்வுகள் செய்து வல்லுநர் அபிப்ராயம் கூறப்படுகிறது. இரத்தம், நூல் இழை, இரசாயனப்பொருள், துப்பாக்கிகள், தோட்டாக்கள், கையெழுத்துகள், புகைப்படம், கைரேகை ஆகிய துறைகளில் வல்லுநர்கள் பணியாற்றுகிறார்கள்.

# II. Organisation of the State Government (Pondicherry)

## புதுவை காவல் துறையின் அமைப்பு

புதுவை யூனியன் பிரதேசம் 4.92 சதுர கிலோ மீட்டர் அளவு கொண்டது. அதில் புதுவை, காரைக்கால், மாஹே, ஏனாம் ஆகிய பகுதிகளைக் கொண்டதுதான் புதுவைப் பிரதேசம், 1986-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி புதுவை யூனியன் பிரதேசத்தில் 6,77,700 ஜனத்தொகை ஆகும். புதுவை பிரதேசத்தின் முழுமைக்கும் இந்தியன் போலீஸ் ஆக்ட் 1861-ன் படி புதுவையை ஒரே மாவட்டமாக நிர்ணயிக்கப்பட்டது.

புதுவை யூனியன் பிரதேசத்தை 1954-ஆம் ஆண்டு இந்தியக் குடியரசு நாட்டோடு இணைப்பதற்கு முன்பாகவே, தலைமை காவல் துறை அதிகாரிகள் பிரெஞ்சு அதிகாரிகளாக இருந்தார்கள். அவர்களுக்கு உதவியாக உள்ளூரைச் சேர்ந்தவர்களையே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்தப் போலீஸ் அமைப்பை "சிப்பாய் கம்பெனி" என்று அழைத்தார்கள். அவர்கள் பிரெஞ்சு சட்டத்திட்டங்களைப் பின்பற்றி வந்தார்கள். இந்திய குடியரசு நாட்டோடு இணைந்த பிறகு போலீஸ் அதிகாரிகளும் அதில் பணியாற்றக் கூடியவர்களும் இந்திய அமைப்பில் இருந்து படிப்படியாக தேர்நதெடுக்கப்பட்டு அவர்கள் இந்திய சட்டத்திட்டங்களையும், விதிமுறைகளையும், கடைப்பிடிக்கப்பட்டு நடைமுறையில் நாளடைவில் கொண்டுவரப்பட்டது.

தற்போது புதுவை மாநிலத்தில் காவல் துறை Inspector General அவர்கள் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. அவர்களுக்குக்கீழ் இரண்டு முதுநிலை கண்காணிப்பாளர்கள் அவர்களும், 17 கண்காணிப்பாளர் அவர்களும், 34 ஆய்வாளர் அவர்களும், 91 உதவி ஆய்வாளர் அவர்களும், 304 தலைமை காவலர்களும், 1,360 காவலர்களும் காவல் துறையில் பணிபுரிந்து வருகின்றார்கள் புதுவை மாநிலத்தில் தலைமை காவல் துறை அதிகாரி அவர்களும், முதுநிலை கண்காணிப்பாளர் அவர்களும், இந்தியன் போலீஸ் சர்வீஸ் பணியில் இருப்பவர்கள் மற்றும் கண்காணிப்பாளர் அவர்கள் அனைவரும் பாண்டிச்சேரி போலீஸ் சர்வீஸில் உள்ளவர்கள் ஆவார்கள்.

புதுவை மாநிலம் முழுவதும் நான்கு சிறிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு கண்காண்ப்பாளர் தலைமையில் இயங்கி வருகிறது. புதுவைப் பகுதியை வடக்கு, தெற்கு என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு கண்காணிப்பாளர்களின்கீழ் இயங்கி வருகின்றது. மூன்றாவது பிரிவு காரைக்காலும் ஒரு கண்காணிப்பாளர் அவர்களின் கீழ்தான் இயங்கி வருகின்றது. நான்காவது பிரிவு மாஹேயும் ஒரு கண்காணிப்பாளர் அவர்களின் கீழ்தான் இயங்கி வருகின்றது. இது போன்று ஏனாம் பகுதி புதுவை வடக்குப் பகுதியுடன் இணைக்கப்பட்டு புதுவை சாலைப் போக்குவரத்து கண்காணிப்பாளர் அவர்களின்கீழ் இயங்கி வருகின்றது. புதுவை மாநில காவல் துறை ஒன்பது போலீஸ் வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு ஆய்வாளர் அவர்களின்கீழ் இயங்கி வருகிறது.

இதைத் தவிர கீழ்க்கண்ட பிரிவுகள் ஒவ்வொரு காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களின்கீழ் செயல்பட்டு வருகிறது.

**(a) போர் மரபுகள் - ஆயுதப்படையின் உயிர்த்துடிப்பு**

MARTIAL TRADITIONS-LIFE FORCE OF AN ARMED (P.K. வினாயக் அ.கா.ப.)

போர்ச்சம்பிரதாயங்களையும் அமைப்புகளையும் போன்று ஒரு போர் வீரனுடைய துமுக்கியையோ (துப்பாக்கி) அல்லது தேச உணர்வையோ பாதிப்பது வேறு இருக்கமுடியாது. போர் முனையானும், வேறிடமானாலும், அணிவகுப்பானாலும் இந்த சம்பிரதாயங்கள் முக்கியத்துவம் வசிக்கின்றன. இராணுவ சீருடை அனைத்திற்கும் சிகரமாக அமைகிறது. காவல்துறையாயினும் இராணுவமாயினும் மற்ற ஒத்த நிறுவனங்களாயினும் சம்பிரதாயங்களை எதிர் கேள்வியின்றி பின்பற்றுகின்றன. இராணுவ வாழ்க்கையில் இவைகள் முக்கியமாயிருப்பதால் நாமும் இவைப்பற்றி தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

**காவற்பணி :**

இந்தப் பழக்கம் தொன்று தொட்டு மனனர்கள் காலத்தில் இருந்தே பினபற்றப்படுகிறது. பாதுகாவல் அற்ற அரசன் ஏற்படுத்திய முறையே இதுவாகும். அவர்கள் எப்பொதும் கோட்டை வாயிலில் விழிப்புணர்வுள்ள காவலர்களாக நிறுத்தினர். இவர்களது பணி எதிரியின் வருகையை நுகர்வதும் பார்வையாளர்களை அடையாளம் காண்பதும் ஆகும். வந்திருப்பவர் நல்ல எண்ணத்துடன் வந்துள்ளார் என்பதை உறுதி செய்த பின்னரே அவர் அனுமதிக்கப்பட்டார். வந்திருப்போரை சோதனையிடும்போது காவல் தொடர்பான அனைவரும் எச்சரிக்கையோடு செயல்பட்டனர். தற்போது நிலவும் திடீர் தாக்குதலை சமாளிக்கும் படை கூட இத்தேவையின் அடிப்படையிலானதே.

இன்றைய இராணுவ கூடாரங்களில்கூட இப்பழங்கால முறை பின்பற்றுவது இம்முறை போர் வலிமையையும் போர் திறமையையும் கணிக்கும் அலகாக அமைகிறது. இப்பணியாட்கள் எல்லா வகையிலும் விசுவாசமாகவும், தூய்மையானவர்களாகவும் இருக்க வேண்டும். பார்வையாளர்களின் கணிப்புக்கு முதலில் உள்ளாகுவோரும் இவர்களே. எனவே இருக்கும் போர் வீரர்களில் மிகச் சிறந்தவரே இப்பணியில் அமர்த்தப்படுகின்றனர்.

**காவலரை சோதித்தல் - விழாக்கால அணிவகுப்பு**

முக்கிய பிரமுகர்களையும் மேலதிகாரிகளையும் கௌரவிக்கும்போது விழாக்கால அணிவகுப்பு நடத்துவது சம்பிரதாயம். இந்த நடைமுறையும் மன்னர்கள் காலத்திலேயே தோன்றியதுதான். இரண்டாம் சார்லஸ் மன்னன் மீண்டும் அரியணை ஏறியபோது தன் போர் வீரர்களின் நம்பக தன்மையை சந்தேகித்ததாக நம்பப்படுகிறது. எனவே ஒரு முறை அவனுடைய பிரபுக்களால் ஒரு பகுதி படை சார்லஸ் மன்னனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் மூலமாக அந்த மன்னர் பெருமையாக ஒவ்வொருவர் முன்பும் நின்று கூர்ந்து கவனித்து உற்று நோக்கி வீரனின் நம்பகத் தன்மையை சோதித்தறிந்தான். தேவை ஏற்பட்டால் மன்னர் இப்பார்வையையும் சோதனை செய்தார். இந்த முறையையே பிற்காலத்திலும் படைத்தலைவர்கள் பின்பற்ற ஆரம்பித்தனர். அன்றுதொட்டு இன்றுவரை இப்பழக்கமே நடைறையில் உள்ளது. இருந்த போதிலும் தற்போது இந்த முறை மேலதிகாரிகட்கு மரியாதை செய்யும் அவர்படையிலும் அசைவுகளைக் கூர்ந்து கவனிக்கவும் ஏதுவாகிறது.

### ஆயத்த அழைப்பும் முரசு அறிவிப்பும்.:

தொன்றுதொட்டே பல நூற்றாண்டுகளாக செய்தி தொடர்பு முறைகள் வளர்ச்சி அடைந்திராத நாட்களிலும் ஊதல் அழைப்பும், முரசு அறிவிப்பும் வழக்கத்தில் இருந்துள்ளன. இராணுவ தளபதிகள் இந்த முறைகளையே செய்தி அறிவிப்பு முறைகளாக பின்பற்றி வந்தனர். நடைமுறை தேவைகளின் போது வீரர்களின் கவனத்தை கூர்ந்து அழைக்க இம்முறை பின்பற்றப்பட்டது. இந்த ஒலியைக் கொண்டே இசையின் ஏற்ற இறக்கத்தின மூலமாக நடத்தும் போரின் தன்மையை அறிந்தன. போர் வீரர்களின் அன்றாட வேலைகள் கூட இம்முறையில் ஒழுங்குப்படுத்தப்பட்டது. பலவகையான சங்கீத ஒலிகளை எழுப்பி (கட்டளைக்குப் பதிலாக) வீரர்களுக்கு பலவகைப்பட்ட நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டன.

### ஆரம்பம் மற்றும் இறுதி அறிவிப்புகள் :

இம்முறையும் தொன்றுதொட்டே பின்பற்றப்பட்டு வருகிறது. வீரர்களை போர்முனைக்கு மீண்டும் அழைப்பதற்காக பறை முழங்குவோர் தெருக்களில் பறை முழுங்கிக்கொண்டு சென்றனர். ஆரம்ப அறிவிப்பு போரின் முதல் கட்டத்திலும், இறுதி அறிவிப்பு போர் முடியும் நேரத்திலும் அறிவிக்கப்பட்டன. இறந்த வீரர்களின் இறுதிச்சடங்கின் போது இறுதி அறிவிப்பு ஒலியே முழங்கப்படுகிறது.

### எழுகை ஒலி (REVEILLE):

விடியற்காலையில் ஒலிக்கப்படும் எழுகை ஒலியானது போர் வீரர்கட்கு ஒருவகை காலை அறிவிப்பாகும். போர் வீரர்களை அணிவகுப்புக்கு ஆயுத்தப்படுத்தவும், தொடர்நடவடிக்கை கட்டுமான ஆயத்த அழைப்பே எழுகை ஒலியாகும். அணிவகுப்பு முடியும்போதும், அணிவகுப்பு முடிந்து கலையும்போதும் ஊதல் அறிவிப்பு ஒலிக்கப்படுகின்றன. வருகைப்பட்டியல் எடுக்கும் போதும், விளக்குகள் அணைக்கப்படும்போதும் வேறு சில காரணங்கட்கும் ஊதல் ஒலிகள் எழுப்பப்படுகின்றன.

### பின்னடைதல் (RETREAT) :

பின்னடைதல் ஒலி சூரியன் மறைவின்போது எழுப்பப்படுகிறது. சில வேலைகளில் நம்பப்படுதல் போல இந்த ஒலி நாளின் முடிவையோ, இரவின் ஆரம்பத்தையோ குறிக்காது. பின்னடைதல் ஒலி எழுப்புதலின் ஆரம்ப வரலாறு வியக்கத்தக்க ஒன்று. பழங்காலத்தில் போர்புரியும் இரண்டு படைகள் சூரிய மறைவுக்குப்பின் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டு போரிடுதலை நிறுத்தினர். எனவே, அந்த நேரத்திற்குப்பின் போரிட வேண்டாம் என்று ஒவ்வொரு போர் வீரர்களுக்கும் அறிவுறுத்தப்பட வேண்டியுள்ளது. ஆகையால் ஒரு நீண்ட உரத்த குறிப்பிட்ட ஏற்ற இறக்கமுள்ள ஊதல் ஒலி போர் முடிவில் ஒலிக்கப்பட வேண்டியுள்ளது. வேண்டுமென்றே இவ்வொலி நீண்ட நேரம் ஒலிக்கப்பட்டால் போர் வீரர்கள் அனைவரும் போரை நிறுத்தி முகாம்களுக்கு செல்லவேண்டும் என்று அறிவித்தனர். இன்றும் இப்பின்னடைதல் ஒலி நீண்ட நேரம் எழுப்பப்படுகிறது.

இந்தப் பினனடைதல் ஆரம்பமானவுடன் ஒலியுடன் போர்க் கோடிகள் இறக்கப்பட்டன. இவ்வாறாக கம்பத்தில் கொடி இல்லாததுகண்ட போர் வீரன் போர் நிறுத்த ஒலியை

கேட்காமலேயேகூட அந்த நாளுக்கான போர் முடிவு பெற்றதை அறிந்தான். பின்னடைதலுக்குப் பிறகு இரு தரப்புப் படையினரும் பயமோ, அச்ச உணர்வோ இன்றி காயம்பட்ட மற்றும் இறந்த வீரர்களை முகாமுக்குக் கொண்டு வந்தனர். காலப்போக்கில் தளபதிகள் சூரிய உதயகாலமும் சூரிய மறைவுக் காலமும்தான் எதிரிகளை திகைப்படைய செய்யும் நேரமெனா உணர்ந்தனர் எனவே காலை எழுகையின்போதும் பின்னடைதலின் போதும் போர் நிறுத்தப்படும் வழக்கமானது இன்றும் பின்பற்றப்படுகிறது.,

**வீரவணக்கம்.**

சாதாரணமாக சீருடை வீரர்களிடம் நாம் காணும் மரபு வீர வணக்கம் செலுத்ததுவதாகும். இந்தமுறை கீழ்ப்படிதலை ம்டடும் குறிப்பதில்லை. இது ஒருவருக்கொருவர் தங்களின் கருத்து பரிமாற்றங்களை செய்து கொள்ள உதவியது. பழங்காலத்தில் எதிரியை நேர் கொள்ளும்போது காட்டுமிராண்டி தனத்தை கைவிட்டு வெறும் கையை உயர்த்திக்காட்டி தம்மால் ஏதும் ஆபத்தில்லை என்பதை உணர்த்தவே ஏற்பட்ட இவ்வழக்கம் காலை நேரத்தில் சாதாரண வணக்கம் செலுத்ததும் முறையானது. பிற்காலங்களில் வீரர்கள் ஒருவரை ஒருவர் கடக்கும்போதும் தம் தலைக்கவசத்தின் முகமூடியை உயர்த்தி தாழ்த்தினர். இது நல்லெண்ணத்தைக் குறித்தது. இவ்வணக்க அசைவுகளில் சில வித்தியாசங்கள் இருப்பினும் அடிப்படை அசைவானது கையை விரித்து முன்நெற்றிவரை உயர்த்துவதுதான் நடந்து செல்லும் வீரர்கள் வணக்கம் இட்டுக்கொண்டு அதிகாரியின் முகத்தை பார்த்துச் செல்வார். இந்தப் பழக்கமும் முதற்காலத்தில் இருந்ததுதான், சிறைப்பிடிக்கப்பட்ட கைதிகள் (ஊர்வலத்தில்) வீதிகள் வழியாக அழைத்து செல்லப்பட்டபோது தங்களின் அதிகாரிகளின் முன்பு தலை குனிந்த நிலையிலே நடக்க வேண்டியதாயிற்று. இதுவே வெற்றியடைந்த போர் வீரர்கட்கு உரிமையாகும். அணிவகுப்பு மரியாதையில் நேரில் பார்க்கும் கட்டளை எல்லோருக்கும் சமம் என்பதை குறிக்கிறது. வேறு சில வகை வணக்கங்களிலும் இதே பயிற்சியே அளிக்கப்படுகிறது. துப்பாக்கி ஏந்திய நிலையில் செய்யும் வணக்கம் துப்பாக்கியை செங்குத்தாக தரை மட்டத்திற்குக் கொண்டு வந்தபின் செய்யப்படுகிறது.

டாங்கிகளும் கவச வண்டிகளும் வணக்கத்தின் போது வெடி குழாய்களை கீழ் நோக்கிய நிலையிலேயே வைத்து நகர்கின்றன. இது ஆபத்தின்மையின் தன்மையை குறிக்கின்றது. அதிவேக விமானங்களும், வணக்கத்தின் போது தரையை நோக்கி குட்டிக்கரணமடித்து தம்மால் ஆபத்தில்லா தன்மையை உறுதி செய்கின்றன. இவ்வாறாக எல்லாவகை வீரவணக்க முறைகளும் நட்புக்கான அறிகுறிகளாக விளங்குகின்றன. இவ்வாறாக போர் மரபுகள் ஒரு வீரனின் வாழ்வின் ஒழுங்கிணைந்த பகுதியாக அமைகின்றன. பெரும் பெரும் படைகள் போர் மரபுகளை கடைபிடித்து வருகின்றன. போர் மரபுகளை காக்க எதையும் செய்யும் ஒரு வீரனுக்கு போர் மரபுகள் என்பவை இரத்த சோகை நோயாளிக்கு இரத்தத்தை போன்றவை. போர் மரபைக் கடைப்பிடிக்காத படைகள் கூட மதிப்புடனும், கண்ணியத்துடனும் சேவை செய்யும் படைகள் வரலாற்றில் நிலைத்த இடத்தை தாங்கள் பெறுவதற்கும், போர் மரபுகளை கடைபிடிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

## (b) பாண்டிச்சேரி ஆயுதப்படை பிரிவு - PONDICHERRY ARMED POLICE:

புதுவைக் காவல் துறை பிரெஞ்சு இந்திய காலனி ஆட்சியில் அமைக்கப்பட்டதாகும், பாதுகாப்பு, அவசரகால பணி இவற்றிற்காக ஒரு ஆயுதப்படையும் இருந்தது. 1954-ல் பிரெஞ்சுக்காரர் ஆட்சி முடிந்து இந்தியக் குடியரசுடன் பாண்டிச்சேரி காலனி சேர்ந்து கொண்ட போது காவல் துறை சீர்திருத்தப்பட்டது. ஷெட்டி என்பவரின்

தலைமையில் புதுவை காவல்துறை மாற்றி அமைக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த ஒரு பிரிவும் (லோக்கல் போலீஸ் -Local Police), அவசரகாலப்பணி பாதுகாப்பு இவற்றிற்காக ஒரு பிரிவும் (Armed Police) என இரு பிரிவு பிரிக்கப்பட்டது. லோக்கல் போலீசுக்கு அவர்களுடைய பணியில் சரிவர செய்வதற்காக ஆயுதப்படை ஒரு துணைப்பிரிவாக (Axiliary Force) அமைக்கப்பட்டிருந்தது. புதுவை ஆயுதப்படை பிரிவு 1956-ல் அமைக்கப்பட்டதாகும்.

தற்போது புதுவை ஆயுதப்படை பிரிவில் ஐந்து கம்பெனிகள் உள்ளன. எட்டு காவலர்களை உடைய ஒரு பிரிவுக்கு Section என்று பெயர். அதற்கு ஒரு தலைமைக் காவலர் அதிகாரியாகிறார். மூன்று, நான்கு Section-கள் சேர்ந்தது ஒரு பிளட்டூன் (Platoon) ஆகும். மூன்று பிளட்டூன்கள் சேர்ந்தது ஒரு கம்பெனி ஆகும். ஒரு கம்பெனிக்கு அதிகாரி ஒரு ஆய்வாளர் ஆகிறார்.

ஆயுதப்படை பிரிவு பாசறையில் (Barracks) தங்கியுள்ளது. ஆயுதப்படை பிரிவின் ஆயுதங்களை ஆயுதக்கிடங்கில் (Ball of Arms) வைக்கிறார்கள். இந்த ஆயுதக்கிடங்கை காவல் புரிவது ஒரு பாரா குழுவாகும். இதற்கு குவார்ட்டர் கார்டு (Quarter Guard) என்று பெயர்.

ஆயுதப்படையுடன் இசைக்குழு (Band Unit) உள்ளது. இக்குழு உதவி ஆய்வாளரின் (Band Master) கீழ் இயங்குகிறது. தளவாய்க்கு ஒரு அலுவலகம் உண்டு. ஆயுதப் படையின் அதிகாரிகள், காவலர்கள் இவர்களின் காவாத்து (Parade) பயிற்சிக்கும், ஒழுங்கு முறை (Discipline) நடத்தைக்கும் பணி முறையாக நடத்தப்படுவதற்கும் பொறுப்பேற்கிறார்.

**பணி**

ஆயுதப்படையில் காலை 6 மணிக்கு ரோல்கால் வைத்து காவலர்ளைக் கூட்டி அவர்களுடைய சீருடை சோதனை செய்த பின்பு காவாத்து மைதானத்தில் (Parade Ground) உடற்பயிற்சி பின் காவாத்து வாங்கப்படுவார். இது காலை 6.30 மணியில் இருந்து 7.30 மணி வரை வழக்கமாக நடக்கும் மற்றும் ஆயுதங்களைப் பற்றிய வகுப்பு, அந்தந்த உதவி ஆய்வாளர்கள் நடத்துவார். முாலை 4.30 மணிக்கு ரோல்கால் வைத்து விளையாட்டு பயிற்சி நடைபெறும். திரும்ப இரவு 7 மணிக்கு ரோல்கால் வைத்து காவலர் எண்ணிக்கை சரிபார்ப்பார்கள்.

ஆயுதப்படை தங்கியுள்ள கோரிமேடு காம்ப்ளெக்சில் (Complex) உள்ள குவார்ட்டர் கார்டில் தினம் காலை சூரிய உதயத்தில் தேசியக் கொடி ஏற்றப்படும். அதே போல் மாலையில் சூரிய அஸ்தமனத்தின்போது தேசியக் கொடி இறக்கப்படும். பாராக் குழுவினர் தேசியக் கொடி காலையில் ஏற்றும்போதும் மாலையில் இறக்கும்போதும் அணி வகுத்து மரியாதை செலுத்துவர்.

புதுவை ஆயுதப்படையிலிருந்து புதுவை துணைநிலை ஆளுநர் மாளிகைக்கும் தலைமை செயலகம், சட்ட மன்றம் ஐ.ஜி. (I.G.P) அலுவலகம், புதுவை கஜானா (Treasury), சிறைச்சாலை, வில்லியனூர் துணை கஜானா, பாகூர் துணை கஜானு, யூகோ பேங்க், நீதிமன்றம், என்.சி.சி. அலுவலகம் மற்றும் வானொலி நிலையம் ஆகிய இடங்களில் பாரா அலுவல் (Guard Duty) செய்கின்றனர்.

அவ்வப்போது ஆயுதப்படை பிரிவில் உள்ளவர்கள் காவாத்து பயிற்சி, துப்பாக்கி ஏந்தி காவாத்து பயிற்சி,, லத்தி (Lathi) ஏந்தி காவாத்து பயிற்சி கலவரக் கும்பலைக் கலைக்கும் பயிற்சி (Mob Operation), விழாக்காலச் சிறப்பு அணிவகுப்பு (Ceremonia; Parade), கண்ணீர் புகை எறிதல் பயிற்சி (Gas Training), துப்பாக்கி சுடும் பயிற்சி முதலிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

தற்போது புதுவை ஆயுதப்படை பிரிவும், லோக்கல் போலீஸ் பிரிவும் ஒருங்கே இணைக்கப்பட்டதால் சட்டங்களும் கற்பிக்கப்படுகின்றன. பணிக்காலத்தில் காவலர்கள் பணிக்கு வராது பாசறையில் முறை தவறி நடத்தல், அஜாக்கிரதை, சீருடை சரியின்மை போன்று சிறு தவறுதல்களுக்கு கம்பெனி அதிகாரி அல்லது தளவாயோ தன் முன் ஆஜர்படுத்தி சிறு தண்டனைகள், கூடுதல் காவாத்து (Extra Parade) போன்ற தண்டனைகளை அளிக்கப்படும். தவறு பெரிதாக இருந்தால் இலாகா பூர்வமாக விசாரணை நடத்தி சம்பளக் குறைப்பு, பணி இறக்கம் (Reversion/ reduction) பணியை விட்டு நீக்குதல் (Dismissal) போன்ற தண்டனை அளிக்கப்படுகிறது..

தற்போது சட்டம், அமைதி பணி அன்றி போக்குவரத்து துறையிலும் ஆயுதப்படைப் பிரிவினர் போக்குவரத்து கட்டுப்பாட்டுத் துறைக்கு உதவிகரமாக இருக்கின்றனர். இரவு நேர ரோந்திலும் பங்கேற்கின்றனர்.

ஆக புதுவை காவல் துறையின் சிறப்பான சேவையில் ஆயுதப்படை பிரிவும் முக்கிய அங்கம் வகிக்கிறது.

### இந்திய ரிசர்வு பட்டாளியன் (IRBn):

மத்திய அரசில் வழிகாட்டுதலோடு புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இந்திய ரிசர்வு பட்டாளியன் அமைப்பு 2004-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இதில் 625-காவலர்களும் 25 Wireless காவர்களும் 12 உதவி-ஆய்வாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே ஆவடியில் (சென்னை) உள்ள மத்திய சேமநல காவல் படைப்பிரிவிற்கும், கோயம்புத்தூர் மத்திய சேமநல காவல் படைக்கும் 9- மாதக்கால பயிற்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பயிற்சி முடிந்த காவலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் யூனியன் பிரதேசம் வந்து சேர்ந்தார்கள். மேலும் காவலர்களை தீவிர பயிற்சியின் பொருட்டு ஆந்திர பிரதேசம், ஐதராபாத்திற்கும், அஸ்ஸாம் மாநிலத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இவர்கள் தீவிர பயிற்சி முடிந்த பின்பு புதுச்சேரி மாநிலத்தில் தங்கி சட்டம் ஒழுங்கு மற்றும் புதுச்சேரி காவல் துறைக்கு துணைக் காவல் படையாக இவர்கள் செயலாற்றுவார்கள். இந்த பிரிவு காவல்துறை தலைமை அதிகாரியின் கீழ் பணிபுரிவார்கள். மேலும் இந்த படைப்பிரிவுக்கென ஒரு தலைவாய், துணை-தலவாய் ஒன்று , உதவி-தலவாய் 6-ரும் இதில் அடங்குவார். துலைமை காவலர்களாக எல்லை பாதுகாப்புப்படை மற்றும் மத்திய தொழிற்காப்புபடை பிரிவுகளிலிருந்து தலைமை காவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் சுமார் 80-பேர் சேர்ந்திருக்கிறார்கள்.

### (C) போக்குவரத்து காவல் துறை – TRAFFIC POLICE)

புதுவை யூனியன் பிரதேசத்தின் தலைமைக் காவல் துறை அதிகாரி அவர்களின் ஆணைப்படி (No.D1/MISC/337/78 dt.01.09.1978) கடந்த 1978-ஆம் ஆண்டு போக்குவரத்துக் குற்றங்கள் சம்பந்தமாக பதிவு செய்வதற்கென்று தனியாக போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

## அதிகார வரம்பு

பாண்டி வடக்குப் பகுதியில் உள்ள பெரியகடை, ஒதியஞ்சாலை, முத்தியால்பேட்டை, உருளையன்பேட்டை, தன்வந்திரி நகர் ஆகிய காவல் நிலைய எல்லையிலும் மற்றும் முதலியார்பேட்டை வட்ட எல்லைக்குள் உள்ள முதலியார்பேட்டை காவல் நிலைய எல்லையிலும் ஏற்படும் சாலை விபத்துக்களை வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்வது மற்றும் மோட்டார் வாகனச் சட்டப்படி வழக்குப் பதிவு செய்தல்.

## எண்ணிக்கை

அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல்துறை கண்காணிப்பாளர் | - | 1 |
| 2. | காவல்துறை ஆய்வாளர் | - | 1 |
| 3. | காவல்துறை உதவி ஆய்வாளர் | - | 4 |
| 4. | தலைமைக் காவலர்கள் | - | 5 |
| 5. | காவலர்கள் | - | 68 |

## தற்போதுள்ள எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல்துறை கண்காணிப்பாளர் | - | 1 |
| 2. | காவல்துறை ஆய்வாளர் | - | 1 |
| 3. | காவல்துறை உதவி ஆய்வாளர் | - | 4 |
| 4. | தலைமைக் காவலர்கள் | - | 4 |
| 5. | காவலர்கள் | - | 65 |

ஒரு தலைமைக் காவலர் பதவியும், 3 காவலர் பதவியும் நிரப்பப்படாமல் உள்ளது.

## வழக்கு பதிவு செய்தல்:

புதுவை மாநிலத்தில் தெற்கு மற்றும் கிராம பகுதிகளில் சாலை விபத்துக்களை வழக்கு பதிவுசெய்து விசாரணை செய்ய வில்லியனூர் போக்குவரத்து காவல் நிலையம் 2005–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த காவல் நிலைய எல்லை ரெட்டியார் பாளையம், வில்லியனூர் மற்றும் திரிபுவனை ஆகிய சரகங்களில் ஏற்படும் சாலை விபத்துகளை இவர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்வார்கள். இந்த பிரிவுக்கு 1–ஆய்வாளர், 1–உதவி–ஆய்வாளர், 2–தலைமை காவலர்கள் மற்றும் 12 – காவலர்கள் பணிபுரிகிறார்கள்.

## பணி விவரம்

போக்குவரத்து சம்பந்தப்பட்ட விதிமுறைகளை புதுவை நகரில் நடைமுறைப்படுத்ததுதல், போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள்மீது வழக்குப் பதிவு செய்தல் மற்றும் போக்குவரத்து விபத்துக்கள் சம்பந்தமான வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தல் மற்றும் மிகவும் முக்கியம் வாய்ந்த நபர்களுக்கு (VIPs) வழிக்காட்டும் பணியையும், பல்வேறு பாதுகாப்பு பணிகளையும் முக்கியஸ்தர்களும், பெருந்தன்மை வாய்ந்தவர்களும் புதுவை யூனியன் பிரதேசத்தை பார்வையிட வரும்போது வழிகாட்டும் பணிகளையும் பாதுகாப்புப் பணிகளையும் செயல்படுத்துகிறது.

மேலும், போக்குவரத்துக் காவல் நிலைய நடுத்தரப்பள்ளி சிறுவர்களுக்கு போக்குவரத்து சாலை விதிகள் சம்பந்தமாக பயிற்சி கொடுக்கிறது. சாலை சமிஞ்சைகள் நடுதல், சாலையில் கோடிடுதல் முதலியவற்றையும் செய்கிறது.

மேற்கூறியவற்றை நடைமுறைப்படுத்த வசதியாக புதுவை நகர் 4 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு உதவி ஆய்வாளர் நியமிக்கப்பட்டு, அவர்களை ஆய்வாளர் மற்றும் கண்காணிப்பாளர் மேற்பார்வையிடுவர்.

புதுவை நகரில் 26 முக்கிய இடங்களுக்கு சாலை விதிகள் அமுல்படுத்த வேண்டியுள்ளது. இவற்றில் 6 இடங்கள் மிகவும் நெரிசலான பகுதிகளாகும். ஆதலால் காவலர்களுடைய கவனிப்பு காலை 7.30 மணி முதல் இரவு 10 மணி வரை இரண்டு பிரிவாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. முக்கியமான 6 இடங்களின் பெயர்கள்.

1. பட்டாணிக்கடை சந்திப்பு
2. ஒதியஞ்சாலை சந்திப்பு
3. சைக்கிள் செயின் பாக்டரி சந்திப்பு
4. ஜீவா திரையரங்க சந்திப்பு
5. கடலூல்-வில்லியனூர் நிலேயம்
6. புது பேருந்து நிலையம்
7. கொக்கு பாலம், ஜீவா காலணி

**தானியங்கும் சமிஞ்சைகள் (Automatic Signals).**

பட்டாணிக்கடை சந்திப்பு, ஒதியஞ்சாலை சந்திப்பு மற்றும் சைக்கிள் செயின் பாக்டரி சந்திப்பு ஆகிய இடங்களில் தானியங்கும் சமிஞ்சைகள் பொருத்தப்பட்டு உள்ளது. மேலும் மூன்று தானியங்கும் சமிஞ்சை கருவிகள் மற்றும் பன்னிரெண்டு மின்சார கண்சிமிட்டும் விளக்குக்ள (Blinkers) அமைப்பதற்கு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுளள தானியங்கும் சமிஞ்சை கருவிகள் அமைக்க உத்தேசித்துள்ள இடங்கள்.

1. மகாத்மா காந்தி சாலை – லால்பகதூர் சாஸ்திரி வீதி சந்திப்பு
2. அஜந்தா திரையரங்க சந்திப்பு
3. நெல்லித் தோப்பு சந்திப்பு

**மின்சார கண்சிமிட்டும் கருவிகள் பொருத்துவதற்கு உத்தேசித்துள்ள இடங்கள்.**

1. காமராஜர் சாலையில் ஜிப்மர் மருத்துவமனை அருகில்
2. காமராஜர் சாலையில் சுப்பையா திருமண மண்டபம் அருகே சென்டரல் ஸ்கூல் வளாகத்தின் எதிர்ப்புறம்
3. வில்லியனூர் சாலையில் எல்லைப்பிள்ளை சாவடி சாலை சந்திப்பு இடம் மற்றும் 100 அடி சாலை சந்திக்கும் இடம்.
4. கடலூர் சாலையில் முதலியார்பேட்டையில், உப்பளம் ரோடு கடலூர் சாலை சந்திக்கும் இடம்.
5. ஜவஹர்லால் நேரு வீதி – ஆம்பூர் சாலை சந்திப்பு
   ஜவஹர்லால் நேரு வீதி – காந்தி வீதி சந்திப்பு மற்றும்
   ஜவஹர்லால் நேரு வீதி – பாரதி வீதி சந்திப்பு

6. குபேர் சாலையில் - சாராய ஆலே அருகில்
7. குபேர் சாலையில் - காந்தி சிலே அருகில்
8. குபேர் சாலையில் - நீதிமன்றதருகில்
9. ரங்கப்பிள்ளை தெரு — ஆம்பூர் சாலை சந்திப்பு
10. அண்ணு சாலை -ஶ்ரீ நீடராஜப்பய்யர் வீதி சந்திப்பு
11. மகாத்மா காந்தி ரோடு - ரங்கப்பிள்ளை வீதி சந்திப்பு
12. சாரம் பாலம்

**d). குற்றப் புலனாய்வுத் துறை – CRIMINAL INVESTIGATION DEPARTMENT.**

**முகவுரை (INTRODUCTION)**

புதுவையில் 19-05-1967-ஆம் ஆண்டு உத்தரவு எண் A1,6831-67(2) dated. 19-05-1967-ன் படி ஒரு கண்காணிப்பாளரின் கீழ் இயக்கப்பட்டு வருகிறது.

**விசாரணை செய்யக்கூடிய வழக்குகள; (INVESTIGATION OF CASES)**

நிர்ணய உத்தரவு எண் 3/88-ன் படி இத்துறைக்கு மாற்றம் செய்யும் வழக்குகள் முது நிலை கண்காணிப்பாளரோ அல்லது காவல் துறைத் தலைவரிடமோ உத்தரவு பெறாமல் எந்த வழக்குகளையும் விசாரணைக்காக குற்றப்புலனாய்வுத்துறைக்கு அனுப்பக்கூடாது. இதற்கு முன் 4-7-1986-ல் காவல் துறை தலைவரின் நிர்ணய உத்தரவின்படி எல்லா வழக்குகளையும் வழக்குகளின் தன்மையின்றி குற்றப்புலனாய்வு துறைக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. நிர்ணய உத்தரவு எண் 3,88, dated 6-5-1899-ன் படி மிக முக்கிய வழக்குகள் மட்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**புலனாய்வுத் துறைக்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை Sanctioned Strength of C.I.D.**

| | ஆய்வாளர் (Inspector) | உதவி-ஆய்வாளர் Sub-Inspector | துலைமை காவலர் (Head Constable) | காவலர் (Constable) |
|---|---|---|---|---|
| ஆனுமதிக்கப்பட்ட அளவு (Sanctioned Strength | 1 | NIL | 2 | 2 |
| உண்மையான அளவு (Actual Strength) | 2 | 1 | 3 | 3 |
| கூடுதலான அளவு (Excess Strength) | 1 | 1 | 1 | 1 |

**துப்பறியும் நாய்ப் பிரிவு (Dog Kennel)**

புதுவை அரசின் உள்துறை 10.05.1984 அன்று G.O.Ms/No.58-ன் படி புதுவைக்கு யூனியன் பிரதேசத்திற்கு புலன் விசாரணைக்கு உதவிபுரிய 01.01.1999 அன்று புதுவை அரசாங்கம் மேலும் மூன்று (கீதா, நீட்டா, உஷா) நாய்க்குட்டிகளை வாங்கியது. கீதா, நீட்டா இவைகளுக்கு வெடிமருந்து கண்டுப்பிடிக்கும் 6-மாதம் மத்திய

பிரதேசத்தில் உள்ள எல்லை பாதுக்காப்பு படையில் அமைந்துள்ள தேசிய நாய்கள் பயிற்சி பள்ளியில் பயிற்சி அளிக்கப்பட்டு 3.07.1999 அன்று புதுவைக்கு கொண்டுவரப்பட்டது. மேலும் நாய் உஷாவுக்கு ஒன்பது மாதம் துப்புதுலக்கும் பயிற்சி அளித்து 03.10.1999 அன்று புதுவைக்கு கொண்டுவரப்பட்டது. அதன் பிறகு 2000-ஆம் ஆண்டு மேலும் இரண்டு நாய்கள் (தாரா, ஷியாம்) புதுவை காவல் துறைக்கு வாங்கப்பட்டது. நாய் தாராவிற்கு 01.01.2001-ஆம் ஆண்டு முதல் 30.06.2001-வரை மத்திய பிரதேசத்தில் உள்ள எல்லை பாதுக்காப்பு படையில் அமைந்துள்ள தேசிய நாய்கள் பயிற்சி பள்ளியில் வெடிமருந்து பயிற்சி அளிக்கப்பட்டு புதுவைக்கு 03.07.2001 அன்று கொண்டுவரப்பட்டது. மேலும் நாய் ஷியாமிற்கு 01.01.2001-ஆம் ஆண்டு முதல் 30.09.2001-வரை மத்திய பிரதேசத்தில் உள்ள எல்லை பாதுக்காப்பு படையில் அமைந்துள்ள தேசிய நாய்கள் பயிற்சி பள்ளியில் துப்புதுலக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு புதுவைக்கு 03.10.2001-அன்று கொண்டுவரப்பட்டது.

## கைரேகைக் கூடம் (FINGER PRINT BUREAU)

கைரேகைப் பிரிவுக் கூடம் 1955-ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடைமுறைப் படுத்தப்பட்டது. இப்பிரிவில் ஒரு பரிசோதிக்கும் உதவி ஆய்வாளரும், கைரேகை பதிவு அனுபவம் பெற்றவரும், இரண்டு கைரேகை பதிவு தேடுபவர்களும் இருக்கிறார்கள்.

பரிசோதிக்கும் உதவி ஆய்வாளர் சிறைச்சாலையில் உள்ளவர்களை மட்டும் சோதிக்கும் பொறுப்பானவர் ஆவார். மேலும் அன்றன்றைய பதிவு தொடர்பான வேலைகளையும், குறிப்பேடுகளையும், அறிக்கைகளையும் கண்காணித்து வருகின்றார். மேலும் கைரேகை பதிவு தேடும் பாரமும், கைரேகைப்பிரிவு அனுபவம் பெற்றவரின் கருத்தையும் கோர்ட்டால் அங்கீகரிக்கப்பட்ட ஆதாரங்களையும் குற்றம் நடந்த இடங்களுக்கு சென்று சோதனையிடுவதும் மறைந்திருக்கும் பதிவுகளை வெளிப்படுத்துவதும் இவர் வேலையாகும்.

கைரேகைப் பதிவு அனுபவசாலி பரிசோதிக்கும் உதவி ஆய்வாளரைப்போலவே சிறைச்சாலை தொடர்பான கைரேகை பதிவு சோதனைகளை செய்துவருகிறார்.

கைரேகை முத்திரை தேடுபவர்கள் பரிசோதிக்கும் உதவி ஆய்வாளர் அல்லது கைரேகைப்பதிவு அனுபவம் பெற்றவர்முன் சென்று குற்றம் நடந்த இடத்தில் கைரேகை முத்திரை உள்ளனவா என்று சோதனை இடுவார்கள்.

## புகைப்பட பிரிவு (Photography Section).

கைரேகை பிரிவு கூடம் தொடங்கப்பட்டபோதே அதனுடன் காவல் துறை புகைப்பட பிரிவு கூடமும் துவங்கப்பட்டுவிட்டது. இது கைரேகைபிரிவு கூட இயக்குனர் அலுவலகத்தோடு சேர்ந்து இயங்கி வருகிறது. தற்போது தலைமைக் காவலர் கண்ணன் என்பவர் திறமையாக வேலைபார்த்து வருகிறார். அவருக்கு உதவியாக இரண்டு காவலர்களும் வேலை பார்த்து வருகிறார். இவர் குற்றம் சம்மந்தப்பட்ட இடங்களின் புகைப்படமும், கைரேகைப்பதிவுகளை விரிவுபடுத்தும், குற்றவாளிகளையும், அவர்கள் சம்மந்தமான குறிப்புகளையும் நீதிமன்றங்களால் அறிவிக்கப்பட்ட ஆதாரங்களுக்கான புகைப்படம் போன்ற வேலைகள் செய்து வருகின்றார்.. இவருடன் காவலர் PC 778 கண்ணன் என்பவர் புகைப்பட பயிற்சியாளராக பணிபுரிந்து வருகிறார்.

**குற்றப் பதிவேடுத்துறை (Crime Records Bureau).**

தமிழ்நாடு காவல்துறை 1956-ஆம் ஆண்டு காவல் துறை அதிகாரி கட்டுப்பாட்டின்கீழ் இந்த சிறிய மாவட்ட குற்றபுலனாய்வு கூடத்திற்கு ஒரு உதவி ஆய்வாளரும், மூன்று தலைமை காவலரும் தூது குழுவாக அனுப்பப்பட்டனர். இது புதுவை குற்றப்புலனாய்வு நுட்பத்துறைக்கூடம் என்ற உத்தரவு எண் A1/600,67, Dated 03.07.1967 அன்று அனுமதிக்கப்பட்டதுடன் ஒரு ஆய்வாளரும், இரண்டு உதவி ஆய்வாளரும், மூன்று தலைமைக்காவலரும், இரண்டு காவலரும் கொண்டு இயங்கி வருகிறது. மாவட்ட ஆட்சியாளரின் தலைமை அலுவலகம் உத்தரவு எண்A1/E33-72, Dated 14.07.1972-ல் ஆய்வாளர்கள் கண்காணிப்பில் விடப்பட்டது. குற்ற புலனாய்வுக்துறை நுட்பகூடத்தில் ஒரு உதவி ஆய்வாளர் காலி இடம் உள்ளது. இது உத்தரவு எண் A1,1-59/94, dated 22.06.1974-ல் காவல்துறை கண்காணிப்பாளர் (Home Guard) இதற்கு பொறுப்பாக ஆரம்பிக்கப்பட்டது. இதில் CID-யும் ஒரு நிலையாகும்.

**குற்ற குறிப்பு கூடத்திற்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை –**

| | Insp. | S.I. | H.C. | P.C. |
|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட அளவு (Sanctioned Strength | 1 | 2 | 3 | 2 |
| உண்மையான அளவு (Actual Strength) | 1 | 1 | 3 | 2 |
| கூடுதலானஅளவு (Excess Strength) | - | - | - | - |
| வெற்றிடம் | - | 1 | - | - |

**கணக்கு இயந்திர மையம் (Computer Centre).**

7.5.1986-ஆம் ஆண்டு அன்று புதுவை அரசின் நிதித்துறை சுற்றறிக்கை எண்.536571,86,F3(DRG), dt. 07.05.1986. சுற்றறிக்கையின்படி புதுவையில் கணணி முறையில் (Computer System) குற்றங்களின் பதிவுகளைக் கண்டுபிடிக்க பெரியக்கடை காவல் நிலைய கட்டிடத்தின் .இரண்டாவது மாடியில் இரண்டு அறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுபணித்துறையாலும், மின் துறையாலும் கணணி இயந்திரம் பொறுத்தப்பட்டுள்ளது.

கணணி இயந்திரம் சென்னை M/s.CMCP.Ltd. மூலமாக அமைப்பு பணிகள் 12.05.1986-அன்று செவ்வனவே முடிக்கப்பட்டுள்ளது. புதுவையில் உள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் (காவலர் முதல் கண்காணிப்பாளர் வரை) கம்யூட்டர் தொகுப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான தொகுப்புத்தகம் காவல் துறையினரால் அச்சடிக்கப்பட்டு 1989- ஜனவரி முதல் அனைத்து காவல் நிலையங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.. கணணி இயந்திரத்தை இயக்க இரண்டு இளநிலை எழுத்தர்களும், ஒரு தலைமை காவலரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு M/s CMC P Ltd., மூலம் முறையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**e) சிறப்பு பிரிவி (Special Branch)**

**அமைப்பு**

புதுவை சிறப்பு பிரிவு (Special Branch) என்பது புதுவை காவல் துறை தலைவர் (Inspector General of Police) அவர்களின் நேரடி தலைமையின்கீழ் ஒரு முதுநிலை காவல் கண்காணிப்பாளர் (Senior Superintendent of Police ) ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் (Superintendent of Police ) இவர்களின் பொறுப்பில் இயங்கிவருகிறது.

கண்காணிப்பாளருக்கு உதவியாக இரண்டு ஆய்வாளர்கள் (Inspector of Police) இருக்கின்றார்கள். இவர்களில் ஒருவர் நிர்வாக பொறுப்பிலும் (Administrative Inspector ) மற்றொருவர் தகவல்களை சேகரித்து (Executive Inspector) அளிப்பவராகவும் இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு உதவியாக செயல்பட மூன்று உதவி ஆய்வாளர்கள் (Sub-Inspector) இருக்கின்றார்கள். தகவல்களை சேகரித்து அவ்வப்போது தெரிவிக்க பதினெட்டு தலைமைக் காவலர்கள் இங்கு பணிபுரிகின்றார்கள்.

**காரைக்கால்**

காரைக்கால் பகுதியில் உள்ள தகவல்களைச் சேகரித்து அனுப்ப அங்கு ஒரு உதவி ஆய்வாளரும் இரண்டு தலைமை காவலர்களும் நியமிக்கப்பட்டு இருக்கின்றனர்.

**மாஹி.**

மாஹி பகுதியில் உள்ள தகவல்களைச் சேகரித்து அனுப்ப அங்கு ஒரு உதவி ஆய்வாளரும், ஒரு தலைமை காவலரும், ஒரு காவலரும் நியமிக்கப்பட்டு இருக்கின்றனர்.

சிறப்புப் பிரிவின் (Special Branch) முக்கிய பணி, அரசுக்கு கண்ணும் கருத்துமாக இருந்து, புதுவையில் நடைபெற்ற, நடைபெற இருக்கின்ற அனைத்து முக்கிய காரியங்களையும் அவ்வப்பொழுது உடனடியாக தெரிவிக்கும் அமைப்பாக இது செயல்பட்டு வருகிறது.

சிறப்புப் பிரிவு, புதுவை மாநிலத்தில் இருக்கும் மதத்தின் பேரால் மற்றும் அனைத்து இயக்கங்களின் (கட்சிகளின்) நடவடிக்கைளையும ்கண்காணித்து அவ்வப்பொழுது மாநில அரசுக்கம், மத்திய அரசுக்கும் தகவல்களை தெரிவிக்கின்றது. மேலும் இது தொழிற்சங்க நடவடிக்கைகளையும் அரசுக்கு தெரிவிக்கின்றது. மற்றும் வியபாரிகள் மற்றுமுள்ள அனைத்துச் சங்கங்களின், நடவடிக்கைகளையும் அரசுக்கு தெரிவிக்கின்றது.

இப்பிரிவானது, அரசு வேலையில் சேரும் அனைத்து நபர்களைப் பற்றியும் விசாரித்து அவர் அரசு வேலையில் சேர தகுதி உள்ளவரா, இல்லையா? என்பதையும் அரசுக்கு தெரிவிக்கின்றது. மேலும் புதுவை மாநிலத்திற்கு வருகை தரும் இந்திய ஜனதிபதி, பிரதமர், மத்திய அமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் மற்ற மாநில அமைச்சர்கள், புதுவை மாநில துணைநிலை ஆளுநர், புதுவை மாநில முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு (Security) கொடுப்பதும் இப்பிரிவின் தலையாய கடமையாகும்.

புதுவை மாநிலத்தில் தினம்தோறும் நடக்கும் / நடக்கப் போகும் நிகழ்ச்சிகளின் அறிக்கை (Daily Situation Report).

ஒவ்வொரு நாளும் நடைபெற்ற அல்லது நடைபெறப்போகின்ற நிகழச்சிகளை சேகரித்து சிறப்புப் பிரிவு காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் ஒரு ரிப்போர்ட் தயார்செய்து அனுப்புவார்கள். ரிப்போர்ட் - Daily Situation Report எனப்படும். இது அனுதினமும் ஆளுநர், தலைமை செயலாளர், முதலமைச்சர், தலைமை காவல் துறை

அதிகாரி, முதுநிலை காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் ஆட்சியாளர் ஆகிய அனைவருக்கும், தவறாமல் அனுப்பப்படும் மேலம் ஒவ்வொரு வாரமும் கிடைக்கும் தகவல்களை சேகரித்து மத்திய அரசுக்கு வாராந்திர ரிப்போர்ட் (Weekly Report) அனுப்பி வைக்கப்படும்.

**(f) உணவு கட்டுப்பாட்டுத் துறை )Food Cell).**

மனிதனுக்கு மிக அத்தியாவசியமான வீடு, உணவு, உடை இவைகள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். காவல் துறையில் இந்த நவீன உலகத்தில் சட்டம்-ஒழுங்கு மற்றும் நிறைவேற்றும் துறையாக மட்டும் காவல் துறை இருக்கவில்லை. அதில் உணவு பிரிவு காவல் துறை (food Cell) என்ற பிரிவு 1976-ம் ஆண்டிலிருந்து இந்தியா முழுவதும் இயங்கி வருகிறது. பொது மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பதுக்கப்படாமல், கடத்தப்படாமல் அரசாங்கம் குறித்த நிர்ணய விலைக்க மேல் அதிக விலைக்கு விற்காமல் பொருட்கள் ஒழுங்கான முறையில் பங்கீடு செய்து பொதுமக்களுக்கு கொடுக்கப்படுகிறதா என்பதை கண்காணிப்பதுதான் அதன் முக்கியவேலை.

இத்துறை பாண்டிச்சேரி மாவட்ட ஆட்சியாளர் (கலெக்டர்) கீழ் உள்ள உணவு பங்கீட்டு துறை (Civil Supply Department)யின் கீழ் பணிபுரிந்து வருகிறது. பாண்டிச்சேரி முழுமைக்கும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளர், ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், இரண்டு துணை உதவி ஆய்வாளர்கள், நான்கு தலைமைக் காவலர்கள், பதினைந்து காவலர்கள் பணி புரிகிறார்கள். இவர்களில் காரை மாலட்டத்திற்கு ஒரு ஆய்வாளர், ஒரு தலைமை காவலர், ஆறு காவலர்கள் மேற்சொன்ன எண்ணிக்கையிலருந்து பிரித்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

அத்தியாவசியமான பொருட்களின் சட்டத்தின் (Essential Commodities Act 1985)-ன் படி அத்தியாவசியமான உணவு பொருட்கள் 1. அரிசி 2. சக்கரை 3. போதுமை 4. எண்ணெய் 5. மண்ணெண்ணெய் 6. மலிவு ரக துணிகள் 7. புளி 8. மிளகாய் 9. சிமெண்ட் 10. கேழ்வரகு 11. பருப்பு வகைகள் அவைகளும் இன்னும் சில பொருட்கள் மத்திய சர்க்காரால் இச்சட்டத்தின் கீழ் அறிவிப்பட்டு மாநில சர்க்காரால் கெஜட்டில் அப்போதைக்கப்போது வெளியிடப்படுகிறது. இதன் நோக்கமே ஏழைப் பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் நியாயமான விலையில் உணவு பொருட்கள் கிடைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. உணவு பிரிவு காவல் துறையும், உணவு பங்கீட்டுத் துறையும் சேர்ந்து கண்காணித்து சட்ட விரோத செயல்களை தடுத்து வருகிறார்கள்.

இச்சட்ட விரோத நபர்களின்மீது கீழ்கண்ட சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

1. Cluse 4 (a) of Pondicherry Essential commodities (Display of Stock, Price and Maintenance of Account) Order , 1955 r/w 7 (1) (a) (ii) of Essential commodities Act, 1955.

2. Clauses 19 and 25 of Pondicherry Kerosene Control Order, 1969 amended in 1982 r/w 7 (i) (a) (ii) of Essentail Commodities Act, 1955.

3. Clause 9 of Pondicherry Scheduled Commodities (Regulations) and Distribution by Card System Order, 1975 r/w 7 (1) (a) (ii) Essential Commodities Act, 1955.

4. Clause 8 of Pondicherry Foodgrains Licensing Order, 1975 r/w 7 (i) (a) (ii) Essential Commodities Act, 1955.

5. Pondicherry Cement Control Order/ 1973 போன்ற இந்தச் சட்டப் பிரிவுகளின்படியும் இன்னும் சில பிரிவுகளின் படியும் வழக்கு பதிவு செய்து பாண்டிச்சேரி தனி நீதி மன்றத்தில் (Special Judge Court) தண்டனை கொடுக்கப்படுகிறது.

இத்துறை 1976–ஆம் ஆண்டிலிருந்து நல்ல முறையில் இயங்கி நமது புதுவை காவல் துறையின் நன்மதிப்பை பெற்று பொதுமக்களிடமும் நல்ல பெயரை பெற்று சிறந்து விளங்கி வருகிறது.

**(g) இலஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை – Vigilance and Anti-Corruption Police Unit.**

இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் உள்ளது போல புதுவை யூனியன் பிரதேசத்திலும் கண்காணிப்பு மற்றத் இலஞ்ச ஒழிப்புத் துறை கடந்த 1965–ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இந்தத் துறை புதுவை மாநில தலைமை செயலாளரின் நேரடி பார்வையில் காவல் துறை கண்காணிப்பாளர் கண்காணிப்பில் இயங்கி வருகிறது. தலமை கண்காணிப்பு அதிகாரியின் அலுவலகம் தலைமை செயலகத்தில் ஒரு பிரிவாக துணை செயலாளர் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

புதுவை, நெம்பர் 80, லால்பகதூர் சாஸ்திரி வீதியில் காவல் துறை கண்காணிப்பாளர் மேற்பார்வையில் இவ்வலுவலகம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தில் மேற்படி கண்காணிப்பாளர் தலைமையில் காவல் துறையைச் சேர்ந்த இரண்டு ஆய்வாளர்களும், இரண்டு உதவி ஆய்வாளர்களும், தலைமை காவலர்களும் மற்றும் காவல்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.

கடந்த 1986–ஆம் வருடத்திலிருந்து கூட்டுறவு கண்காணிப்பு பிரிவும் இத்துறையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்தப் பிரிவிற்காக காவல் துறையைச் சேர்ந்த ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமை காவலர் மற்றும் காவல்களுக்கும் பணிபுரிந்து வருகின்றனர்.

**கண்காணிப்பு மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறையின் பணிகள்.**

1. இலஞ்சம் மற்றும் முறைகேடுகள் சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்களின் மீதான, புகார்களை விசாரணை செய்து மேல் நடவடிக்கைக்காக மேலதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

2. நேர்மையற்ற மற்றும் இலஞ்சம் பெறக் கூடிய அரசு ஊழியர்களை பொறி வைத்து பிடித்து கைது செய்து குற்ற வழக்கு தொடர்நது தக்க நடவடிக்கை எடுத்தல்.
3. மேலதிகாரிகளிடமிருந்து வரும் அரசு ஊழியர்கள் மீதான புகார்களை விசாரித்து தக்க நடவடிக்கைக்காக அறிக்கை தாக்கல் செய்வது.
4. அரசு ஊழியர்களின் நடவடிக்கையை கண்காணித்து சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்கள் செய்யும் முறைகேடுகளின் மீது தகவல் சேகரித்து மேலதிகாரிகளுக்கு தெரிவிப்பது.

**கூட்டுறவு கண்காணிப்பு பிரிவின் பணிகள்.**

கூட்டுறவுத் துறையில் அடங்கியுள்ள பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் நடக்கும் முறைகேடுகள் மற்றும் கையாடல் சம்பந்தப்பட்ட புகார்கள் கூட்டுறவுத் துறையில் இருந்து பெறப்படுமானால் மேற்படி புகார்கள் மீது விசாரணை செய்தும் குற்ற வழக்குகள் தொடர்ந்தும் விசாரணை செய்தும் தக்க நடவடிக்கை எடுத்தல்.

## h). குடியுரிமை பாதுகாப்புப் பிரிவு - Protection opf Civil Rights Cell.

இப்புதுவை மாநிலத்தில் 1982-ஆம் ஆண்டு முதல் மக்கள் குடியுரிமை பாதுகாப்பு அமைப்பு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மக்கள் குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை இந்த நிலையத்தில் விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியில் குடியுரிமை பாதுகாப்பு பிரிவு செயல்பட்டு வருகிறது. புகார்கள் மட்டுமின்றி தீச்செயல், கொடுமைப்படுத்துதல், தீண்டாமை போன்றவைகளின் மீது விசாரணை செய்தும் அவ்வின மக்களுக்கு நியாயம் கிடைக்கவும் வழிவகை செய்யப்படுகிறது.

இவ்வமைப்புகள் கண்காணிப்பாளரின் நேரடி கவனத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யுமுன் சட்ட இலாகாவிடம் ஆலோசனை கலந்து பின், சீஃப் ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் வழக்குகள் நடத்தப்படுபின்றன. காரைக்காலில் அரசு ஆணையின் மூலம் குற்றங்களை மக்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நீதி விசாரணை செய்யப்படுகிறது.

புதுவைப் பகுதியில் தீண்டாமை தீவிரமான முறையில் இல்லை. பொது இடங்களாகிய உணவு விடுதிகள். விடுதிகள், தங்குமிடங்கள், கோயில்கள் போன்ற இடங்களில் அட்டவணை இன மக்களின் மேல் வித்தியாசம் காட்டப்படுவதில்லை.

**இந்த காவல் நிலையத்தின் காவலர்களின் வழக்கமான பணிகள்.**

1. அட்டவணை இன மக்கள் வாழும் அனைத்து கிராமங்களுக்கும் சென்று அவர்களுக்கு மற்ற இனத்தவர்களுடன் சமூக உறவு வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவையைக் கற்றுக் கொடுப்பது.
2. தீண்டாமை பழக்கம், தீச்செயல், கொடுமை, சித்ரவதை போன்றவற்றைப் பற்றச் செய்திகள் சேகரிப்பது.
3. விவசாய வேலை, கூலிச் சண்டை போன்றவற்றிற்கு நிலச் சொந்தக்காரர்கள், இந்த சாதிக்காரர்களுடன் அட்டவணை இன மக்களுக்கு சுமூக முடிவு ஏற்படுத்துதல், இவற்றைப் போன்றவற்றிற்குச் செய்தி சேகரித்தல்.

4. சாதிப் பிரச்சனைகளின்போது அரசு ஆணை அமுலாக்கும் நிறுவனங்களுக்கும்., அட்டவணை இன மக்களுக்கும் மத்தியஸ்தராக பணிபுரிதல்.
5. அட்டவணை இனச் சங்கங்களிலிருந்து அட்டவணை மலைவாழ் இனத்தவர், நல இயக்குநரிடமிருந்தும் வரும் புகார் மனுக்களை விசாரணை செய்வது.
6. அட்டவணை இன மக்கள் மற்ற வகுப்பினர் மீது காட்டும் குற்றச் சாட்டுகளை விசாரணை செய்வது.

ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் இவ்வமைப்புக் காவல் கண்காணிப்பாளரின் கண்காணிப்பின்கீழ் மக்கள் குடியுரிமை பாதுகாப்புச் சட்ட வழக்குகளை விசாரணை செய்கின்றனர்.

**மக்கள் குடியுரிமைப் பாதுகாப்பு அமைப்பின் செயல்பாடுகள்.**

1. மக்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைப் புதுப்பித்து அமுலுக்குக் கொண்டுவந்து தாக்கல் செய்வது.
2. அட்டவணை இன மக்களின் புகார்களையும், குறைபாடுகளையும் நிர்வாகத்திற்குக் கொண்டு வருவதை, அமுலுக்கு கொண்டு வருவதை புதுப்பித்தல்.
3. ரெவின்யூ, போலீஸ் அட்டவணை இன மக்கள் நல அமைப்பின் நிர்வாகத்தை புதுப்பித்தல்.
4. கொடுக்கப்படும் மற்ற எந்த வேலையும் அரசாங்கத்தால் புதுப்பித்தல். இந்தச் சட்டம், மக்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955 என்று அழைக்கப்படுகிறது.

1). செக்ஷன் குறுகிய விளக்கம்
2). செக்ஷன் விவரணம்
3). மத சம்பந்தமான சடங்குகளை செய்ய இயலாமைச் செய்தல் போன்றவற்றிற்கு தண்டனை
4). சமுதாய இணக்கமான காரியங்களை செய்ய தடுப்பது, அவர்களுடைய உரிமையை வழங்க மறுப்பது

5. ஆதி திராவிட, மலை ஜாதியினரை பள்ளி, வைத்திய சாலைகளில் அனுமதிக்க மறுப்பது, தடுப்பது.
6. பண்ட மாற்று முறையில் விற்க, வாங்க மறுப்பது, தடுப்பது.
7. தீண்டாமை என்ற பேரில் திட்டுவது.
8. உரிமத்தைப் பறிமுதல் செய்தல்
9. சர்க்கார் உதவி வழங்கு நிதி நிறுவனங்களின் நிதியை நிறுத்த வகை செய்யும் பிரிவு.
10. குற்றமிழைத்தோரை மறைத்து, ஒளித்து வைத்தல்
11. தொடர்ந்து குற்றமிழைப்போர்க்கு ஒன்று திரண்ட தண்டனை கொடுத்தல்.
12. சில வழக்குகளில் கோர்ட்டின் யூகம்
13. வரையறுக்கப்பட்ட எல்லை சம்பந்தமாக
14. கம்பெனிகள் செய்யும் குற்றங்கள் சம்பந்தமாக
15. வழக்கைப் பிடிக்கக்கூடிய குற்றமாக ஏற்று நிறைவேற்றுதல்.
16. வேறு ஒரு சட்டம் இந்தச் சட்டத்தை மீறக்கூடாது.

(அ) இளநிலை சோதனைக் குற்றவாளிகள் சட்டம் 14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இச் சட்டம் தடை செய்யாது.

17. திரும்பவும் இதை மாற்றி / திருத்தி அமைக்க அதிகாரம் வழங்குகறது.

## (i) வானொலிப் பிரிவு - **RADIO BRANCH**

புதுவை காவல் துறையில் வானொலி பிரிவு ஒரு காவல் கண்காணிப்பாளரின் மேற்பார்வையில் ஒரு ஆய்வாளரின் பொறுப்பில் 3 ரேடியோ சூப்ரவைசர், இவர்கள் உதவி ஆய்வாளரின் தகுதியிலும், 12 ரேடியோ டெக்னிஷியன்கள் துணை உதவி ஆய்வாளர்களின் தகுதியிலும், 3 ஒயர்லெஸ் ஆப்ரேட்டர்கள் இவர்கள் , 1 ஃபோர்மேன் டெக்னிஷியன் இவர் துணை உதவி ஆய்வாளர் தகுதியிலும், 26 தலைமைக் காவல் ஒயர்லெஸ், 44 காவலர் ஒயர்லெஸ், 3 மெசஞ்சர் (காவலர்கள்), 3 எலக்ட்ரிஷியன் (காவலர்) தகுதியிலும் பணியாற்றி வருகின்றார்கள்.

புதுவையில் வானொலிப் பிரிவு இரண்டு வித முறையில் செயல்படுகிறது. ஒன்று புதுவையில் மட்டும் தொடர்பு கொள்வதற்கு நீண்டதூர தொடர்பு கொள்ளுதல் மற்றொன்று வெளிவட்டாரங்களில் தொடர்பு கொள்ள மிக வெகுதூர தொடர்பு கொள்ளுதல் முறை என இருவகையாக செயல்படுகிறது. (அதாவது மாஹே, ஏனாம், காரைக்கால் போன்ற பகுதிகள் தொடர்பு கொள்ளுதல்).

இதைத் தவிர நம் புதுவையில் இருந்து மற்ற மாநிலங்களுடன் தொடர்பு கொள்ளும் வகையில் !Inter-State Police Wireless) கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளது. இதைத் தவிர இரகசிய முறையில் செய்திகளை அனுப்ப சைபர் பிரிவு ஒன்றும் உள்ளது.

இப்பிரிவின் மூலம் புதுவை காவல் துறை காவல் நிலையங்களில் ஒரு காவல் நிலையத்திலிருந்து மற்ற காவல் நிலையத்திற்கு தொடர்பு கொள்ளவும் உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொள்ளவும் ஒயர்லெஸ் செட் அமைக்கப்பட்டு உள்ளது. அவைகளில் தொடர்பு கொள்ள காவல் நிலையங்களில் உள்ள எழுத்தர் காவலர்களுக்கும் ஓட்டுனர் காவலர்களுக்கும் இப்பிரிவின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்நிதி ஆண்டில் (1988-1989) புதுவையில் உள்ள எல்லா மொபைல்களையும், நிலையத்தில் உள்ள ஸ்டேடிக்ஸ்களையும் தொடர்பு கொள்ளும் வகையில் தானியங்கி ஒலிபரப்பு நிலையம் (Automatic Relaying Station) புதிதாக கோரிமேட்டில் அமைக்கப்பட உள்ளது. இதனால் ஒலிபரப்புவதற்கு தடையில்லாமல் தனித்து பேசுவதற்கு சாதகமாகிறது.

## (ஜ) மோட்டார் வாகனப் பிரிவு - **Motor Transports Section:**

இப்பிரிவு காவல் துறையில் ஒரு உதவி ஆய்வாளரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. இப்பிரிவில் 67 ஓட்டுநர்கள் தலைமைக் காவலர் தகுதியில் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பிரிவில் ஏழு பெரிய வாகனங்கள் உட்பட 69 வாகனங்களும், 63 மோட்டார் சைக்கிள்களும் உள்ளன. இவைகளை காவல் துறை தலைவர், முதுநிலை கண்காணிப்பாளர்கள், கண்காணிப்பாளர்கள், வட்ட ஆய்வாளர்கள் ஆகியவருக்கும் முக்கிய காவல் நிலையஙகளுக்கு Light Motor Vehicle –களையும் காவல் நிலையஙகளில், அனைத்து பிரிவுகளிலும் பணிபுரியும் ஆய்வாளர்கள் வரையில் மோட்டார் சைக்கிள்களும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

இப்பிரிவில் காவல் துறைக்கென சிறிய பணிமனை ஒன்று நிறுவப்பட்டு இருக்கின்றது. இதில் மூன்று தலைமைக் காவலர்கள் மெக்கானிக்காகவும் அவர்களுக்கு உதவியாளர்களாக

மூன்று காவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பிரிவு வானொலி பிரிவு கண்காணிப்பாளரின்கீழ் இயங்கி வருகிறது.

# III. Relations between the Police and the panchayats. the Social Services, the Magistracy and other Departments.

## பஞ்சாயத்துக்கள், சிறப்பு அலுவல்கள், நீதிபதிகள் மற்றும் இதர துறைகளுடன் காவல் துறை கொண்டிருக்க வேண்டிய உறவு.

### காவல் துறையும பஞ்சாயத்துகளும்.

குடியரசு நாட்டில் உள்ளாட்சி நிர்வாகத்தின் கடைசி அமைப்பு கிராமப் பஞ்சாயத்துக்களே. கிராமப் பஞ்சாயத்து தலைவரும், உறுப்பினர்களும், அந்த கிராமத்து மக்களை கட்டுப்படுத்தக்கூடிய முக்கிய மனிதர்கள். இவர்களுடன் காவல் தறையினர் நல்ல தொடர்பு வைத்துக் கொள்வதன் மூலம் குற்றவாளிகள் நடமாட்டம், மதுவிலக்கு, உட்பூசல் ஆகியவை பற்றி இவர்கள் மூலம் தகவல் பெற முடியும்.

### காவல் துறையும் சிறப்புப் பணிகளும்.

இதைப்போல் சாரணர் இயக்கம் சமூக சேவை நிறுவனங்கள் முதலியவற்றுடன் நாம் சுமூகமான உறவு கொண்டிருக்க வேண்டும்

### காவல் துறையும் நீதிமன்றமும்

காவல் துறையினர் எவ்வளவு இடர்களுக்கிடையே வழக்குகள் கண்டு பிடித்தாலும், புலன் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தாலும் இறுதியாக அவற்றறைச் சீர்தூக்கிப்பார்த்து நீதி செய்வது நீதிமன்றந்தான். ஆகவே குற்றவாளிகளை நீதிமன்றத்தின்முன் கொண்டு வரும் நமது கடமையுடன் நீதி செலுத்தப்படுவதற்கு உதவியாக, சம்மன் வாரண்டுகளை நிறைவேற்றுதல், சாட்சிகளை குறிப்பிட்ட வழக்கு நாட்களில் நீதிமன்றத்தில் கொண்டு வந்து சேர்த்தல் ஆகியவற்றில் நாம் அக்கறையுடன் செயல்படுவதன் மூலம்தான் நல்லுறவை வளர்க்க முடியும்.

### காவல் துறையும் இதர வகைகளும்.

(1) வருவாய்த் துறை, நிர்வாகத்தின் முதுகெலும்பு போன்றது. வருவாய்த்துறை அரசின் தலைமைச் செயலரும் உள்துறை செயலருமே காவல் துறையை கட்டுப்படுத்துகிறார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நிர்வாக அதிகாரிகள் மட்டுமின்றி நிர்வாக நீதிபதிகளும் ஆவர். சட்டம், ஒழுங்கை பராமரித்தல், தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதிலும் காவல் நிலையங்களில் மரணம், காவலர்கள் சட்ட விரோதமாகச் செயல்படுதல் இவற்றை விசாரிப்பதிலும் இவர்களுக்குத்தான் அதிகாரமுண்டு எனவே காவல் துறை இத்துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. இவ்வாறு

இருப்பதால் காவல் துறையினர் வருவாய்த் துறையினரிடம் மிகவும் கூட்டுறவுடன் இருக்க வேண்டும்.

(2) காவல் நிலையங்களுக்கு காயத்துடன் வருபவர்களை சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும். சிகிச்சைகளுக்கு மருத்துவ அதிகாரிகள் காயச் சான்றிதழ் வழங்குவதுடன் வழக்கு நீதிமன்றத்துக்கு வரும்போது சாட்சியமும் அளிக்க வேண்டும். தற்கொலை, விபத்து, செயற்கை மரணம், கொலை இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இறப்பவர்களுக்கு வைத்தியப் பரிசோதனை செய்வதுடன் சாட்சியம் அளிக்கவும் வரவேண்டும். மேலும் குடிபோதை வழக்குகள் கண்டு பிடிக்கும்போது அதற்கான சான்றிதழ்களும், இவர்களிடமிருந்து பெறவேண்டும் இவை தவிர காவல் துறையினரே நோய்வாய்ப்பட்டாலும் அரசு மருத்துவ அதிகாரிகளிடம்தான் செல்ல வேண்டும். இத்தகைய காரணங்களால் காவல் துறையினர் மருத்துவ துறையினருடன் நட்புடன் இருப்பது மிகவும் இன்றியமையாதது.

பொதுவாக காவல் துறையினர் எல்லோருடனும், நட்புறவுடனும் நல்லுறவுடனும் உறவை வளர்த்துக்கொள்வதன் மூலம்தான் தங்கள் பணிகளை வெற்றிகரமாகச் செய்ய முடியும்.

## CAR FLAG

(1) பதவியும் அதற்கான சின்னமும் மற்றும் கார் கொடிகள் - (Badges of Ranks

(B) 8. காவல் துறையில் காவல் துறையின் தலைவருக்கு மட்டும் காவல் துறை கொடி அவரது காரில் பறக்கவிடப்படும். புதுவை காவல் துறையின் கொடிய கருநீலத்தில் நடுவில; P.P.) என்ற எழுத்துடன் கூடிய அமைப்பில் இருக்கும். காவல் துறையில் V.V.I.P. (Very Very Important Person) இவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது முக்கிய வேலை. அப்போது V.V.I.P வண்டிக்கு முன்னால் செல்லும் வாகனத்தில் மஞ்சள் நிற கொடி பறந்து செல்லும். அது Advance Pilot என்று அழைக்கப்படும். அதற்கபின் V.V.I.P. (Very Very Important Person)-யின் கார் முன்பு சிகப்பு நிற கொடியுடன் ஒரு வானம் செல்லும், அதற்கு Pilot-என்று பெயர் அதன் பின்னர் V.V.I.P.-யின் கார் பின்னால் சௌ்ளை நிற கொடியுடன் ஒரு வாகனம் செல்லும் அதற்கு Escort என்று பெயர்.

V.I.P-க்கு Advance Pilot மட்டும் இருக்காது. மற்றபடி Pilot-டும் Escort-டும் இருக்கும்.

**(2) துப்பாக்கியும், தோட்டாக்களும் [Arms and Ammunitions (Armour, Magazine Arms at Police Station)]**

காவல் துறைக்கு பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வழங்குவது வழக்கம். ஆயுதங்கள் காவல் நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன. புதுவையில் காவல் நிலையங்களுக்கு வழங்கப்படும் ஆயுதங்கள் 303 Rifle, 410 Musket என இரண்டு வகை ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. 303 Rifle-லில் இரண்டு வகை உண்டு. (1)-Mark 1 Rifle/ (2) SLR AK 47 Mark 2 Rifle. Mark-1 Rifle என்பதில் கத்தி பைனட் இருக்கும். குறிப்பார்பதற்கு Sight-டேன் ஜன் சைட் (Dangen Sight) பொருத்தப்பட்டு இருக்கும்.

Mark-2 Rifle லில் குச்சி பைனட் இருக்கும். இதில் குறிபார்ப்பதற்கு Lip sight, Batal Sight என இருவிதமான சைட்டும் பொருத்தப்பட்டு இருக்கும்.

காவல் நிலையங்களில் துப்பாக்கிகளுக்கு தேவையான தோட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இத்துப்பாக்கிகளை காவல் நிலையத்தில் நிலைய பாரா டியூட்டி செய்யவும் கைதிகளை அழைத்துச் செல்லும்போதும் (Escort) ஊரிலிருந்து நெருக்கடி நேரத்தில் ரோந்து வரவும், அரசாங்க பொருட்களை பாதுகாக்க காவல் இருக்கவும், பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் துப்பாக்கிகளை பாதுகாப்பாக வைக்க ஒரு ஆயுதக் கிடங்கு உண்டு. அங்குதான் காவல் நிலையத்திற்கு அளிக்கப்பட்ட துப்பாக்கிகளையும், தோட்டாக்களையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.

## (3) சம்பளம் மற்றும் இதர படிகள் (Pay and Allowances).

ஒரு காவலரின் சம்பள விகிதம் -ரூ.3050-75-3950-80-4590 ஆனால் அடிப்படை சம்பளம் ரூ.3050-ல் இருந்து ஆரம்பமாகும். ஒரு காவலர் சம்பளம் மற்றும் இதர படிகள் கீழே உள்ளவை போல் இருக்கும்.

<u>பயிற்சியில் இருக்கும் போது காவலருக்கு கிடைக்கும் ஊதியம்</u>

| | | |
|---|---|---|
| Pay | - | 3050 Rs. |
| D.A | - | 503 Rs. |
| City Comp.Allowance | - | 65 Rs. |
| D.P. | - | 1525 Rs. |
| Total Rs. | - | 5,143.00 |

<u>பயிற்சி முடிந்து கம்பனியில் (P.A.P) சேர்ந்த பிறகு காவலருக்கு கிடைக்கும் ஊதியம்</u>

| | | |
|---|---|---|
| Pay | - | 3125 Rs. |
| D.A | - | 1125 Rs. |
| H.R.A | - | 495 Rs. |
| City Comp.Allowance | - | 65 Rs. |
| Washing Allowance | - | 30 Rs. |
| Conveyance allowance | - | 475 Rs. |
| D.P. | - | 1563 Rs. |
| Other | - | 75 Rs. |
| Total Rs. | - | 6,953.00 |

## (4) விடுப்பு (Leave)

ஒரு காவலருக்கு ஒரு வருடத்திற்கு கீழே உள்ளபடி விடுப்புகள் கிடைக்கும்.

1. தற்காலிக விடுப்பு - (C.L.) 15 நாட்கள்
2. ஊதிய விடுப்பு - (E.L.) 30 நாட்கள்
3. அரை சம்பள விடுப்பு - (H.P.L.) 20 நாட்கள்
4. மருத்துவ விடுப்பு. அரை சம்பள விடுப்பாகிய 20 நாட்களை 10 நாட்களுக்கு முழு சம்பளத்துடன் மருத்துவ சான்றிதழுடன் எடுக்கலாம்.
5. விசேஷ விடுப்பு (EOL). எந்தவிதமான விடுப்பும் இல்லாத நிலையில் சம்பளம் இல்லாமல் கொடுக்கும் விடுப்பு.

## (5) ஒழுங்கு (Discipline).

ஒவ்வொரு காவலரும் அதிகாரிகளின் சொல்படி கேட்டு ஒழுங்கை கடைப்பிடிக்கவேண்டும், தனக்கு இட்ட வேலையை நேர்மையாக செய்ய வேண்டும்

## (6) புகார் (complaints)

எந்த காவலர் மீதும் எந்த விதமான புகார்களும் வராமல் நேர்மையாக நடக்க வேண்டும்.

## (7) தண்டனையும் மேல் முறையீடுகளும் (Punishment and Appeals):

ஒவ்வொரு காவலரும் எந்த பிரிவில் வேலை செய்கிறாரோ அந்த பிரிவின் முதுநிலை காவல் கண்காணிப்பாளர்தான் அவருக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் உண்டு. முதுநிலை காவல் கண்காணிப்பாளர் காவலருக்கு தண்டனை கொடுத்தால் அதை தலைமை காவல் அதிகாரியிடம் மேல் முறையிடலாம்.

## (8) பதவி உயர்வு ( Promotion)

காவலரில் இருந்து தலைமை காவலர் பதவிக்கு 50% தேர்வு அடிப்படையிலும், 50% சீனியாரிட்டி அடிப்படையிலும் பதவி கொடுக்கப்படும். தேர்வு மூலம் பதவி உயர்வு பெற ஒவ்வொரு காவலரும் குறைந்த பட்சம் 3 வருடம் தொடர்ச்சியாக காவலர் பதவியில் இருக்க வேண்டும்.

## (9) வெகுமானம் மற்றும் அலங்காரம் (Reward and Decorations):

ஒவ்வொரு காவலரும் அவர்களுடைய வேலை செய்யும் விதத்திலும், கேஸ் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்தாலும் அதற்கு ஏற்றார் போல் வெகுமானம் கிடைக்கும். அந்த வெகுமானங்கள் சீனியாரிட்டி முறையில் பதவி உயர்வு கொடுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒவ்வொரு வெகுமானத்திற்கும் ஒரு